# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2007/24 - 2017 පෙබරවාරි මස 21 වැනි අඟහරුවාදා - 2017.02.21

*2007/24 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், மேற்குறித்த பிரிவின் கீழ் 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதிய 1947/46 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளையை 2017.02.21 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கின்றேன்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2017, பெப்புருவரி 09.

**அட்டவணை**

குறித்த அட்டவணையில் விடய இலக்கம் 12, 15 மற்றும் 16 என்பன நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலம் ;

"12. (அ) ஏதேனுமொரு ஆயுள் அல்லது வைத்தியக் காப்புறுதிப் பூட்கை ; அல்லது,

(ஆ) பின்வருவனவற்றின் மீதான ஏதேனுமொரு காப்புறுதிப் பூட்கை

(i) சிவில் நிர்மாணக் கைத்தொழில் அல்லது விவசாயத்தில் பயன்படுத்தப்படும் பொறி, இயந்திரம் அல்லது உபகரணம் ;

அல்லது

(ii) 2009 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, மோட்டார் போக்குவரத்து (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கருத்தியல்புடனான மோட்டார் வாகனங்களுக்கான சாரதி உரிமங்களின் வகைப்படுத்தலின் கீழான ஏதேனுமொரு கார் அல்லது வகுப்பு (ஆ) இன் இரட்டை நோக்குடைய மோட்டார் வாகனம் தவிர்ந்த ஏதேனுமொரு மோட்டார் வாகனம்.

15. 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கருத்தியல்புடைய மோட்டார் வாகனங்களுக்கான சாரதி உரிமங்களின் வகைப்படுத்தலின் கீழான ஏதேனுமொரு கார் அல்லது வகுப்பு (ஆ) இன் இரட்டை நோக்குடைய மோட்டார் வாகனம் தொடர்பில் ஏதேனும் அத்தகைய நிதிக் குத்தகை தவிர்ந்த ஏதேனுமொரு மோட்டார் வாகனம் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட ஏதேனுமொரு நிதிக் குத்தகையுடன் தொடர்புடைய ஏதேனுமொரு சாதனம்.

16. 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கருத்தியல்புடனான மோட்டார் வாகனங்களுக்கான சாரதி உரிமங்களின் வகைப்படுத்தலின் கீழான ஏதேனுமொரு கார் அல்லது வகுப்பு (ஆ) இன் இரட்டை நோக்குடைய மோட்டார் வாகனம் தவிர்ந்த ஏதேமொரு அசையத்தக்க ஆதனம் தொடர்பில் 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மோட்டார் வாகனம் தொடர்பில் 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பாவனையாளர் கடன் சட்டத்தின் கீழ் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் வாடகை கொள்வனவு உடன்படிக்கை.

03- 307

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.